1992 மார்ச் 24]

செயல்படுத்தப்படுகிற இந்த சத்துணவுத் திட்டம், என் பகுதியில் ஓராசிரியர் பள்ளிகளாக இருக்கின்ற காதாற்றிப்பட்டி, செம்பையன்கிளரி தண்டராயம்பாடி ஆகிய பகுதிகளில் உள்ள பள்ளிகளில் போதிய மாணவர்கள் இருந்தும் சத்துணவு மையம் அமைக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ? அந்தப் பள்ளிகளிலும் சத்துணவு மையங்களை அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிற கேள்வியில் குழந்தைகளுக்குப் பயன்படும் வகையில் சத்துணவு மையம் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அவைகள் குழந்தைகள் நல மையம் என்று பொருள் கொள்ளப்படும். ஏற்கனவே தமிழகத்தில் 28,500 குழந்தைகள் நல மையங்கள் இயங்கி வருகின்றன. இதில் சுமார் 18 இலட்சம் குழந்தைகள் பலன் பெறுகிறார்கள். புதிய மையம் துவக்க வேண்டுமென்றால் குறைந்தபட்சம் 70 குழந்தைகள் தேவை; துவக்க உத்தேசிக்கும் பகுதி தற்போது மையம் செயல்படும் பகுதியிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் நிச்சயமாகச் சத்துணவு மையம் குழந்தைகள் நல மையம் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 335.—திரு. கே. கந்தசாமி, திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன், திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

335—

ஆதிதிராவிடர் மாணவர்களுக்கான உதவித் தொகையை உயர்த்துதல்

*2497—திரு. கே. கந்தசாமி,

திரு எம். எம். எஸ். அபுல்ஹசன்,

திரு. ஆ. சுப்புரத்தினம்.

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆதிதிராவிடர் மாணவர்களுக்கான உதவித் தொகையும் விடுதி மாணவர்களுக்கான தொகையும் விலைவாசி உயர்வால் போதுமானதாக இல்லாததால் இதனை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1992 மார்ச் ௨

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இல்லை.

திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு விடுதியில் உணவுக்கு என்று ஒதுக்கப்படும் தொகை மாதத்திற்கு ரூபாய் 155 தான். தற்போது இருக்கும் சூழ்நிலையில் இந்தத் தொகை போதாது. மாணவர்கள் ஊட்டச் சத்துடன் வளர வேண்டுமென்ற எண்ணம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்தத் தொகையை, காலத்தை உத்தேசித்து 250 ரூபாயாகக் கொடுத்து அவர்கள் சத்துணவு பெற அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மைய அரசு தனது திட்டத்தின்கீழ் வழங்கக் கூடிய உதவித் தொகையை உயர்த்தும் பட்சத்தில் மாநில அரசும் அதுபற்றிப் பரிசீலிக்கும்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மாணவர்கள் வறுமையின் காரணமாக, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தங்களுடைய கல்வியைத் தொடர்ந்து தொடர முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது இன்றைக்கு இடையிலே கல்வியை நிறுத்திவிடக் கூடிய டிராப் அவுட் லிஸ்டிலே அவர்கள்தான் நாட்டிலே முன்னிலையில் நிற்கிறார்கள். இதற்கு வறுமைதான் முக்கிய காரணம். எனவே, இதனை அடிப்படையாகக் கொண்டு, எதையும் விரைந்து செய்யக்கூடிய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு இந்த உதவித் தொகையை, அவர்களுடைய கல்வி நிலையையும் அவர்களுடைய எதிர்காலத்தையும் கருத்திற்கொண்டு உயர்த்தித்தர முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு உதவித் தொகையை உயர்த்துகிறபோதுதான் மாநில அரசும் உயர்த்த முடியும் என்பதை ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. போளூர் வரதன்.

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், மத்திய அரசு உதவித் தொகையை உயர்த்தினால்தான் மாநில அரசு உயர்த்த முடியும் என்று இங்கே குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு நம்முடைய நிதிநிலையைப் பார்க்கிறபொழுது

1992 மார்ச் 24]

ரேஷனிலே அரிசி விலையை உயர்த்தியிருக்கிறோம்; பாமாயில் விலையைக் உயர்த்தியிருக்கிறோம். அந்த ரேஷனுடைய உணவு பொருட்களைத்தான் விடுதிக்கு வாங்க வேண்டிய சூழ்நிலை இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிறது. அதைக் கருத்திற் கொண்டு, தமிழகத்திலே இருக்கின்ற பல்வேறு பகுதியிலே இருக்கின்ற ஆதி திராவிடர் மாணவர்கள் தங்கியிருக்கின்ற மாணவர்கள் விடுதிகளிலே சுகாதாரக் கேடுகள் அதிகம் இருந்தாலும், உணவு என்பது சிறைச்சாலையிலே கொடுப்பது போன்று அச்சுச்சோறு கொடுக்கின்ற ஒரு நிலையை நான் காண்கிறேன். அந்த நிலையை மாற்றியமைப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஆட்சியில் தாழ்த்தப்பட்ட மக்கள் வயிறார உண்ண வேண்டும் என்ற காரணத்தினாலே அந்த உதவித் தொகையை உயர்த்தித் தர அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசி விலையை மத்திய அரசுதான் உயர்த்தியிருக்கிறது. அதேபோல மாநில அரசு மத்திய அரசு கொடுக்கும் பாமாயில் விலையை விடக் குறைத்துத்தான் தந்து கொண்டிருக்கிறோம் என்பதை இங்கே தகவலுக்காகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 336. திரு. தேனி பன்னீர்செல்வம் இருக்கையில் இல்லை.

வினா எண் 321—திரு. செ. கு. தமிழரசன் மாண்புமிகு கல்வி அமைச்சர்.

321—

வந்தவாசி பகுதியில் அரசுக் கல்லூரி

*141 — திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) வந்தவாசி பகுதியில் அரசுக் கல்லூரி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.